# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No.C.C.121/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Deposition of Witness for | : | |
| Prosecution | : | |
| Defence | : | அ.சா.4 |
| Name | : | .ரகுவீரபாண்டியன் |
| Father's Name | : | த.பெ.தட்சணாமூர்த்தி |
| Village | : | . மும்முனி கிராமம் |
| Taluk | : | . |
| Calling | : | . |
| Religion | : | இந்து |
| Age | : | .34 |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the year of 25.02.2026.

**2ம் எதிரி ஆஜர். 1, 3 4 எதிரிகள் ஆஜரில் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 எனது அக்கா. அ.சா.2 எனது தகப்பனார். அ.சா3 எனது தாயார். வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும் அவர்கள் அ.சா.1ன் திருமண வழி உறவினர்கள்.

கடந்த 2015ம் வருடம் 1ம் எதிரிக்கும் அ.சா2க்கும் திருத்தனி முருகன்கோவிலில் நிச்சயத்த திருமணம் நடைபெற்றது.

அ.சா.1 என்னிடமும் எனது பெற்றோரிடமும் திருமணம் ஆனதிலிருந்து எதிரிகள் என்னை மரியாதையுடன் நடந்துக்கொள்ளவில்லை என்றும், அடித்து துன்புறுத்துவதாகவும் மிரட்டுவதாகவும், எதுவாக இருந்தாலும் எங்களுக்கு ஏற்றார்போல்தான் வாழமுடியும் என்றும், அடிமைதனமாக நடத்துவதாகவும், வேலைக்காரிபோல நடத்துவதாகவும் தான் நிம்மதியாக வாழவில்லை என்றும் சொல்லியுள்ளார். இதுசம்மந்தமாக நான் நேரடியாக எதிரிகள் வீட்டிற்கு சென்று கேட்டபோது எனக்கே மரியாதை இல்லை. அதன் பிறகு ஒருநாள் நான் எனது அக்காவை சென்று பார்த்தபோது அவருக்கு உதடு வீங்கிய நிலையில் இருந்தது வீட்டிற்கு அழைத்துச்செல்லுமாறு கூறினார். நான் வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டேன். மீண்டும் நாங்கள் சமாதானப்படுத்தி எனது அக்காவை எதிரிகள் வீட்டிற்கு அனுப்பி வைத்தோம். அக்காவிற்கு ஒரு குழந்தை அதன்பிறகு பிறந்தது. அதன் பிறகு எனது அக்கா வரதட்சணை கேட்பதாக எனக்கு போன் செய்து சொன்னார். நாங்கள் அதன் பிறகு நேரில் பேசினோம். ரெடி செய்து தருகிறோம் என்று வார்த்தை கொடுத்தோம் ( சாட்சி தற்போது மேற்படி சம்பவம் குழந்தை பிறந்ததற்கு முன்பு
நடந்ததாக சொல்கிறார்) எனது அக்காவிற்கு குழந்தை பிறந்ததற்கு பின்பு 2020ம் ஆண்டு பிப்ரவரி மாதம் ரூ.5/- லட்சம் ஏன் தரவில்லை என்று கேட்டு அடித்து துன்புறுத்தியதாக எனக்கு போன் செய்து சொன்னார். பின்பு எனது அக்காவை வெளியே அனுப்பிவிட்டதாக தெரிந்து நானும் எனது பெற்றோரும் நேரில் சென்று சமாதானம் பேசினோம். சமாதானம் ஏற்படவில்லை எனது அக்காவை அழைத்துச்செல்லுமாறு கூறினார்கள். நாங்கள் அழைத்து வந்துவிட்டோம்.

பின்பு 2021ம் ஆண்டு1ம் எதிரி தட்சிணாமூர்த்தி போன் செய்து பணத்தை ரெடி செய்தீர்களா என்றம் அ.சா.1 ஏன் வீட்டிற்கு வரவில்லை என்று கேட்டார். பின்பு நேரிலேயே வீட்டிற்கு வந்து பணம் தருகின்றீர்களா என்று கேட்டு எனது அக்காவை அடித்தார். அப்போது நான் வீட்டில் இருந்தேன் பின்பு அவர் கிளம்பிவிட்டார். ஒருவாரம் கழித்து நானும் எனது பெற்றோரும் சமாதானம்பேச சென்றோம் அந்த தேதி ஞாபகம் இல்லை. அன்று காலை 6.00 மணியிருக்கும் அப்போது 1ம் எதிரி அவரது படுக்கை அறையில் வேறொரு பெண்ணுடன் உட்கார்ந்திருந்ததை நான் பார்த்தேன். விசாரித்தபோது அந்த பெண்ணைதான் திருமணம் செய்துகொள்ள போவதாகவும் சொன்னார். எனக்கு பேச வேறு எதுவும் இல்லை என்று வந்துவிட்டோம். பின்பு காவல் நிலையத்தில் எனது சகோதரி புகார் கொடுத்தார்.

**குறுக்கு விசாரணை.**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை மனுவின்பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

// உண்மை நகல் //

Taken down by me in Open Court,
Read over to the witness and Admitted by him/her to be correct.

Sd/-V.Arangasamy,
Judicial Magistrate,
Vandavasi.